



ஓலை 162| ஓசை 285| பிப்ரவரி 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## வி. கனகசபைப் பிள்ளை

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்

ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும், வாய்மையுடையதாகவும் இருப்பின் அதுவே இன்சொல் எனப்படும்

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி



97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

மொழிவது மறுக்கின் அழிவது கருமம்!

பாவகை : நேரிசைப் பஃறொடை வெண்பா




தண்ணீர் தனை வெறுத்தால் தாங்குமோ வையமிது?
கண்ணீர் புறக்கணிக்கும் கண்களே - புண்ணாகும்;
சுண்ணாம்பை வெற்றிலையும் தூரம் ஒதுக்கினால்
மண்தின்ன பாங்காகும் வண்ணமேது? - எண்ணத்தை
ஏற்காமல் நீக்கினால் என்றும் அறிவிளியே;
பாற்கடலில் தூங்கும் பரந்தாமன் - கூடத்தான்
கற்றும் பெரியோர் கனிந்துரைக்கும் நற்மொழியைப்
பற்றிடாமல் நீக்கிப் பழித்தாலே - முற்றும்
அறமழிக்கும் வாழ்வினிலே ஆல்போல் தழைக்கப்
புறக்கணிக்கும் இவ்வுலகம்; புத்தொளியாய் - வீசிடவே
வண்ணமேழு ஏற்றிருக்கும் வானவில்லாய் ஏற்பீரே
திண்ணிய மூத்தோர்சொல் தீர்வு.




இலக்கணக் குறிப்பு:

பஃறொடை வெண்பாவிலும் நேரிசைப் பஃறொடை வெண்பா. இன்னிசைப் பஃறொடை வெண்பா உண்டு. மேலேயுள்ள நேரிசைப் பஃறொடை வெண்பாவில் இரண்டிரண்டு அடிகளுக்குத் தனிச்சீர் வரும். பன்னிரண்டு அடிகள் வரை பற்றி வருவது பஃறொடை வெண்பாவாகும். இரண்டிரண்டு அடிகளுக்கு ஒரெதுகைப் பெற்று, அடி தோறும் முதல் சீரும் மூன்றாம் சீரும் பொழிப்பு மோனைப் பெற்று வரும். வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் இணைந்து காய் முன் நேர் நேர் முன் நிரை, நிரை முன் நேர் என்ற வெண்டளைப் பிறழாமல் சீருக்குச் சீர் பெற்று வரும். செப்பலோசை அமைய வரும். ஈற்றடியான பன்னிரண்டாம் அடி மூன்று சீர்கள் மட்டும் வந்து, மூன்றாம் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில், கு, சு, டு, து, பு, று என்னும் உகர ஓசையில் முடியும். சீருக்குச் சீர், குற்றியலுகரம் நோக்க வேண்டும்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# சித்திரமும் கைப்பழக்கம்


பாவகை : எண்சீர்விருத்தம்.
காய்+காய்+காய்+காய்

சித்திரமும் கைப்பழக்கம்
செந்தமிழும் நாப்பழக்கம்.
சித்தத்தில் நினைத்ததையே
செம்மொழியில் பேசிடுவோம்.

எத்திக்கும் கொண்டாடும்
ஏற்றமிக்க தமிழினையே
எத்தனித்தே பேசிடுவோம்
ஏத்திடவும் வைத்திடுவோம்.

நித்தமும்நாம் நடைபழகி
நினைத்தபடி வாழ்ந்திடுவோம்
நித்திலமாய் மனதையுமே
நிட்டையாக வைத்திருப்போம்.

பித்தலாட்டம் செய்யாமல்
பிதற்றலதை விரும்பாமல்
பித்திகையாய் மணம்வீசி
பிணைந்திருப்போம் ஒருங்கிணைந்தே.



கவிஞர் செ. கலைவாணி



வீதியில்
பயணித்த மனிதர்கள்
பலர் உதிர்த்துச் சென்ற
பல வடிவ வார்த்தைகள்
சிதறிக் கிடக்கிறது
வீதியெங்கும்.

மிதிபடுவதும்
உடைந்து உதைபடுவதுமாக
பின்னிச் சிதைந்து கிடக்கிறது
வார்த்தைகள்.
வார்த்தைகளை
எடுத்துச் செல்லும்படியாய்
ஒலிக்கிறது
ஓர் அசரீரி அறிவிப்பு.

உடையவர்களின் வார்த்தைகள்
அவரவர்க்கு அகப்படாமல்
தொடர்பற்று
சில அழிந்து போயிருக்கும்
நிலையில்.

வார்த்தைகளைச் சேகரிக்கின்ற
அவஸ்தை மிகு போராட்டத்தில்
வெக்கைத் தணலில்
வெதும்பும் மனிதர்களின்
ஒட்டு மொத்த வாழ்க்கையும்
தொலைந்து கிடக்கிறது
அவ்வீதி முழுக்க.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# நினைவின் கொடுமை

காலம் தூசியாய் பறந்து ஓடுகிறது
காதல் காற்றாய் மறைந்து போகிறது
எண்ணங்கள் மாறினாலும்
ஏக்கங்கள் குறையவில்லை
ஆசைகள் எல்லாம்
வெறுப்பாய் மாறி
துரத்தி கொண்டு இருக்கிறது
நினைவுகளின் உச்சம் மனஉலைச்சல்
நிழலே நிஜம்.



கவிஞர் மா. மோனிஷா

# நெஞ்சாங்கூட்டின் நினைவலைகள்



கார்குழல் தேவதையே
கானமிசைக்கும் குயிலே
கண்ணுக்கு மையெழுதி
கவிதைக்கு உயிரூட்டியவளே
நளினத்தால் வசியமாக்கி
நாணத்தால் வசமானவளே

தளிருடல் மேனியாளே
தள்ளாடுது நெஞ்சமே
என்னுள் நுழைந்தாயே
எண்ணமதில் கலந்திட்டாயே
நெஞ்சாங்கூட்டில் நினைவலைகளில்
மூழ்குகிறேன் நித்தமுமே

உணர்வாகி வந்தவளே
உதிரத்தில் உறைந்திட்டாயே
ஏகாந்தமது எனக்கில்லை
நீயெந்தன் அருகினிலே
வஞ்சியின் வனப்பில்
வசீகரமான ஈர்ப்பே

விலகிட மனமில்லை
விந்தைகள் புரிந்தாயடி
வியப்பூட்டும் வித்தகியே
யௌவன ராணியே
சந்தோசமது வந்ததினால்
சஞ்சலமும் மனதிலில்லை

மயங்குகிறேன் உந்தன்
எழிலில் காரிகையே
மாற்றினாய் என்னையே
சரணடைந்தேன் கண்ணே
ஒன்றாவோம் வாழ்விலே
ஐயமில்லாத உறவினிலே

பளிங்குச் சிலையே
பாவையுன் மேனியே
பித்தனானேன் நானே
சித்தமும் குளிர்கிறதே
இல்லறம் இனிதாகிட
நல்லறமும் இதமாகிடுமே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

அவள் விழிகளின் வாள்
வீச்சில் எனக்குள் காதல்
காயங்கள் காவியமாய்

அவள் காதல் மொழிகளில்
நான் எழுதப்படாத எழுத்துக்களின்
ஏக்கங்களாய்

அவள் அழகில் நான்
நாள்தோறும் காணமல் போன
காதல் நினைவின் அதிசயங்களாய்

அவளது அன்பின் அரவணைப்பில்
எனக்குள் காதலின் தீபங்கள்
வானவில்லாய்

அவளது விழிப்போரில் நான்
வீரமரணம் கண்டாலும் உயிர்தெழுவேன்
உண்மை காதலாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

சொல்லும் கஷ்டங்களை எல்லாம்
சொல்லாமலே உணர்ந்தவன் அவன்!
கவனமின்றி விழுந்த பூக்களையும்
தூணாகக் கருதி உயர்த்தியவன்!

நிழல்கள் ஆயிரம் நான் சென்றபோதும்
நிழலுக்கு ஆறுதலாய்
என் நிழலுக்கே துணையாய் வந்தவன்!
ஆணின் அகந்தை தீர்ந்த வேளையில்
அன்பின் நிமிர்வாய் நின்றவன்!

காதல் இல்லாமலே என்னைக் கொண்டாடி
தாய்நட்பின் தூய அன்பை
எனக்குக் காட்டியவன்!

சாய்ந்து கொள்ள கிடைத்த
தங்கமான தோழமை அவன்!



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# மாற்றத்தை நோக்கி!

அழுகை ஓயவில்லை
ஒற்றடை நிரப்பிய அடுமனை
உதிரும் அறிக்கைகள்.
காட்சி மாறவில்லை.

விடியலில்லா பொழுதுகள்
உறக்கமில்லா விழிகள்.
காத்திருக்கும் காலம்.
மாற்றத்தை நோக்கி!



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு



அகர முதல

முப்பாலில் உணர்ந்தது
தமிழ்ப்பாலைச் சுவைத்தது
தப்பாமல் உரைப்பது
குறட்பாவை போற்றியே.

அறம் செய்வோம்
ஆயுள் காப்போம்
இனத்துடனே ஒன்றாக
இனக்கத்துடன் வாழ்ந்திடுவோம்.

கற்றோராய் ஆவதற்கு
கசடற கற்றாலே
கல்லாதோர் தவிப்பதுபோல்
நாம்தவிக்க வேண்டாமே.

சினமென்ற சிறுநகையை
சிரிப்பாலே தடைசெய்வோம்
சிற்றோடை நீர்போல
சில்லென்றே இருந்திடுவோம்.

மழைபோலே வந்திடுவோம்
மழைநீரின் தூய்மைப்போல்
மனதினையே நல்வழியில்
மலர்போல காத்திடுவோம்.

பொருள்படைக்க சிறுமையினை
பொருத்திடவே நலம்கிடைக்கும்
பொருள்பெற்றோர் நெஞ்சத்தை
பொன்போன்று காத்திடுமே.

இன்பத்தில் திளைத்திடவே
இனியவளை கரம்பிடிப்போம்
இல்லறத்தை நல்லறத்தால்
இயல்பாக நடந்திடுவோம்.




மக்கட்செல்வம் பெற்றாலே
பேரின்பம் உன்வாழ்வில்
மகன்மகளால் பெரும்புகழை
பெற்றிடுவோம் இனிதாக.

பெற்றோரை நாம்மதித்து
பெருமைதனை சேர்த்திடுவோம்
பெற்றதனால் பயன்பெறவே
பேரின்பம் பெற்றிடுவோம்.

வள்ளுவரின் ஈரடிகள்
வாழ்விற்கு வழிகாட்டி
வள்ளுவமும் மறையாக
வாழ்நாளில் பேணிடுவோம்.

கவிஞர் முனைவர். ரவி சீனுவாசன் (எ) பகலவன்

# உன்னை எண்ணியே!

பெரும் கனவொன்றுமில்லாமல்
காலாற வந்து போகின்றன
கரையைத் தேடி அலைகள்

புறப்பட்ட பயணத்தில்
புதிதாக எழுதிக் கொள்ளும்
ஞாபகம் எதுவும்
அதற்கு இருந்ததில்லை

எதிர்பாராமல் அணியமாகும்
கிளிஞ்சல்களின் சில்மிசமும்
அதன் கணக்கில் சேர்த்தியில்லை

ஏதோ ஒன்றைத் தேடி அலையும்
கழுகுகள் சூழ்ந்த உலகம்தனில்
சலம்பும் நீரலைகளின் மீது
காதலோடு உரச
களிப்போடு எழுந்தபோது
பசிக்கு பலியான மீனாக நான்

சுவாசத்தை நிரப்புமென்
கனவு பிழையாகி
காட்சித் தோற்றம் அத்தனையும்
அறுந்த நினைவுகளில்
இப்போது அணியமாகிவிட்டது

சூடு பட்ட பூனைக்கு
விருப்பங்களை எரிப்பது மட்டுமே
வினையாக விதிக்கப்பட்டது



இருந்தும்

எங்கோ ஓர் மூலையில்
எதிர்க்காற்றின் புண்ணியத்தில்
எதிர்பாராமல் மருந்தாய்க் கொஞ்சம்
வறட்டுப் புன்னகை
வருமென்ற நம்பிக்கையில்
இழவு காத்த கிளியாய்
ஏங்கிறது மனம் ஏனோ - இன்னும்
உன்னை எண்ணியே

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# வாழ்த்துக்கள் நலம் தரும்

வாழ்த்துக்கள் ஒவ்வொரு விதமே
வாழ்த்துக்கள் தரும் இன்பமும் ஒருவிதமே
வாழ்த்துக்கள் வந்து தழுவிடும் நேரம்
வாழ்வே சுகமாகும்

வாழ்த்து வந்து காதில்
வளமார வாழ்த்தும்
வாழ்த்துபவர் மனதில்
வஞ்சகம் இல்லையா சொல்லும்



மனசெல்லாம் நஞ்சு
பின் ஏன் கொஞ்சுகிறாய் நின்று?
போலிக்கு வாழ்த்து
பாடிவிட்டு போவாயோ?

நல்வாழ்த்துக்கள் நாடினால்
நலம் பல பயக்கும் வாழ்வில்
போலியில் சிரிப்பு
கேலியில் வார்த்தைகள் கொட்டும்

உடன்பிறப்பே உண்மை
உற்றார் பகிர்ந்தனர் மெய்யாக
நண்பர்கள் வாழ்த்துக்கள்
நலம் பல பயக்ககண்டேன் மெய்யாக வாழ்வில்

விளங்கா உறவில்
இதயத்தில் தூய்மை தேடி
போலி கண்டு பாடம் கற்றேன்
பாடம் கற்க
வாழ்த்துக்கள் தேடினேன் இன்று நிஜமாக

நெஞ்சம் சொல்லும் வாழ்த்துக்கள்
மிஞ்சும் வாழ்வில் சொந்தங்கள்
கொஞ்சம் தந்தால் பரவாயில்லை
வாஞ்சை எனக் கொள்வேன் வாழ்த்துக்களை
இன்றும் என்றும் வாழ்வில் நலம் பெற்றிட

கவிஞர் திருமதி. ஜுவனிற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

# தா(க்)கமோ தா(க்)கம்

சித்திரையில் கத்திரியின் தாக்கம்
ஐப்பசியில் தலைகீழ் திருப்பம்
விருந்தாளியை விரட்டினால் வருத்தம்
வயலிலோ பிளந்த பாளங்களாய் மாற்றம்
நீர் சுண்டி ஏர் உழ இயலா துக்கம்
கருமேகங்கள் கூடி உருமாற ஏக்கம்
கொடுங்குழி தோண்டியேனும் நீரூற்ற போராட்டம்
நிலத்தில் எங்கும் இல்லை நீரோட்டம்
உலர்ந்த உடல்வளியும் வியர்வை ஊற்றியும்
தளர்ந்து குனிந்து குழைத்த சேற்றினில்
நித்தம் நித்தம் உழவனின் தடுமாற்றம்
களிறு பூட்டி போரடித்த களத்தில் இன்று
எட்டடுக்கு மாடிகள் மட்டுமே மிச்சம்
விவசாயிக்கு தினமும் பட்டினி வயிறே சொச்சம்!
பட்டினி மனமும் அவனுக்கே அதிக பட்சம்!



கவிஞர் ஜமுனா ஜெகன், நாகர்கோவில்

அன்பினை விதைத்து
நம்பிக்கை தரும்.
அனுதினமும் பிரார்த்தனை செய்து
நன்மதிப்பை நாட்டிடும்.

நினைவுகள் நவரசமாய்
நெஞ்சில் நிறைந்திடும்.
நேர்மையின் நிழலாய்
நெடுநாள் நிலைத்திடும்.

மனம் மலர, உள்ளம் குளிர,
பூவாய் பொழுதெல்லாம்
பொங்கிடும்.

காற்றலை போல கீதமெங்கும்,
நம்நேசம் நாதமாய் வீசிடும்.
பாசம் பரவி பரிமளம் தரும்.



என்றும் உறுதுணையாய் அருகில் நிற்கும்.
அன்பினை தூவி, பண்பினை ஏவி,
நாளும் நம்மை நல்வழி நடத்தி வளர்க்கும்.
காலம் கடந்தாலும் நேசம் காக்கும்.

சோகத்தில் சோர்விலும் ஆறுதலாய் தாங்கும்.
துணிவினை தூண்டி துயரை அகற்றும்.
சிரிப்பை தந்து சிறகாக உயர்த்தும்.

கவலைகளை கண்டுக் கொண்டு கரம் நீட்டி.
கவனமுடன் கண்ணீரை துடைத்திடும்.
தொலைவில் இருந்தாலும் தொடர்பாய் தொடரும்.
மின்னலாய் வந்து மனதில் மலர்ந்திடும்.

உயர்வில் கலந்து உறுதியாய் இருக்கும்.
அசையா மலையாய் மனதில் நிற்கும்.
விழி படாத போதிலும் நேசம் மணக்கும்.
வழிதவறாது என்றும் அரணாக காக்கும்.

ஏக்கம் உடைத்து ஏற்றம் தரும்.
முன்னேற்றப் பாதையில் துணையாக வரும்.
அர்த்தம் சேர்த்து அடையாளம் தரும்.
வாடாத வசந்தமாய் வலிமை தரும்.

நித்தம் நடைபோட்டு
நாதமாய் நாளைக் கடத்தும்.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

# இயற்கையும் நானும்



இறைவன் வரைந்த
மிகப்பெரிய ஓவியம்
எனக்கு வரமாக கிடைத்த பரிசு

கண்ணீர் துளியாக பனிகளும்
சிரித்த முகமாக
பூக்கும் மலர்களும்

இன்னிசை பாடிவரும்
மனதோடு இதமான
நதிகளின் ஓசையும்
பேரின்பம் தந்த பச்சை நிலமும்

பாடிய வண்ணம்
இரை தேடும் பட்சிகளும்
சிலென்ற காற்றில் வருடி சென்றது
என் மேனியங்கும்

தனிமைக்கு உன்னதமான நண்பனாக
மகிழ்ச்சிக்கு இனிதமான சொர்க்கமாக
வர்ணிக்க முடியாத கவிதையாகின்றதே
இயற்கையின் பேரழகு

இயற்கையும் நானும்
உடனான உறவானோம்

கவிஞர் ஏ எம் முர்ஷிதா பேகம், அக்குறணை, கண்டி



அகர முதல

கவிதைகள் அரங்கேற்றும்
கவினுறு வான்வெளி.

மாலையும் காலையுமாய்
மயங்கிடும் வேளையோ?

மதுவின் சாயங்காலமா?
மங்கைமடி சாயுங்காலமா?



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# சங்கத்தமிழ் காதலியே

பொய்கையென நிறைந்து
வைகையென பாய்கிறாய்.
அவனியெங்கிலும் காணேனே
உன் சாயலில் யாரையும் நானே.

யாழ் எழும் இசையே
யான் வாழும் திசையே நீயே.
மணம் கமழும் நறுமுகையே
மனதை களவு செய்தாயே.

உன் பொழுதில் கரைகிறதே
என் நாழிகையே.
உன் தடத்தில் வழி மாறியதே
என் வானிலையே.

ஊன் வாழும் உயிரே
உள் உணர்வின் முகமே.
ஊழி கடந்து வாழும்
நம் காதல் அகமே.

யுகம் தாண்டியும்
ஏடு புரட்டி தேடட்டுமே.
மானுடம் நம் காதலை.

படித்தவன் களி ஆட,
மதி மாயம் கொள்ளட்டுமே.
யாதும் அறியா மனதில்
யாவும் ஆனவளே.



சந்தம் இல்லா இசை
என்னிலே சொந்தமாய்
நீ கலந்திடவே.

இதயத் துடிப்பின் சப்தம் கூட
புல்லாங் குழலாய் இசைந்திடுதே.

கவிஞர் க. கார்த்திகா, கோவை

ஒரு நேசத்தின் முன்
நிரந்தரமாய்
விரிந்தே கிடக்கின்றன.

பிரம்மாண்டச் சிறகுகளாய்,
பெரும்பிரியத்துடன்,
காத்திருக்கும்
இரு விழிகள்.



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

காற்றின் மோதலில்
கல்லாகிப் போயின்
முகிழும் இமைச் சிறகில்
சிறு முகில் கனக்கும்

கனவின் பாலையை
விழியில் கண்டனயோ
சிறு முறுவல் கற்றிதழில்

கவண்வீச்சு விழி
கொண்டனன்
கதை கேட்கும்
சிற்றாவலும் கொண்டனன்

கண்ணா ! கருப்பா!
மழைமுகிலே!
மறை மொழியே!
மனக்குமிழே!
மகிழ்தருவே!



விழிமடை திறந்தொரு
புனலாடி வழியுதிங்கு
பக்தி காதல் இன்பம்
யாதொன்றும் அறியாது
இந்த நெஞ்சம்!

கவிஞர் ஜெயப்பிரபா

எதுவந்த போதிலும் எழுந்திடு துணிந்திடு
எதிர்நின்று போரிடும் எழுச்சிக்கு முதலிடு
எதிர்காலம் என்பதே இன்றைய அடித்தளம்
எதிராகச் சென்றதை எண்ணுவது மடத்தனம்

உன்னுள்ளே நம்பிக்கை உயர்வுக்கு ஏணி
உன்னாலே முடியுமென உரைக்கும் பார்நீ
உன்னத நிலைக்கு உழைப்பதே பலம்
உன்(றன்) வாழ்க்கை உன்(றன்) வசம்



கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

# மகிழ்ச்சி வானில் பறப்போம்





மானிடர்களுக்குக்
மட்டுமே கிடைத்த
மகத்தான பரிசு
மகிழ்ச்சி.

இல்லாத ஒன்றினில்
இருக்கிறது மகிழ்ச்சி.
இச்சிந்தனைக்கு
சிறை வைப்போம்.

நினைத்ததை
அடைவதில்தான்
மகிழ்ச்சியா? இல்லை
நிழல் தரும் மரமாக
இருப்பதும் பெருமகிழ்ச்சியே.

ஆசைகளை சீரமைப்போம்
பிறருக்காக வாழும்
வேஷங்களைக்
களைப்போம்.

இலக்கை அடைவதுதான்
மகிழ்ச்சியா?; இல்லை
இரந்து நிற்போருக்குக்
கொடுப்பதும் மகிழ்ச்சியே.

எது மகிழ்ச்சி
எடுத்துக்காட்டிடுவோம்
எல்லாவற்றிலும்
நிறைவு பெற்றிடுவோம்.

சின்ன சின்ன
விசயங்களில் சிலிர்ப்போம்
சிறகை விரித்து
மகிழ்ச்சி வானில் பறப்போம்.

கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன்

# மரணத்தின் துயரம்

முற்றின முதுமைக்கு
இம்மையிலும்
இனிய இருப்பில்லை.

பெரும் முதுமைக்கு,
பிணமான பின்னும்
பெரும் மதிப்பு ஏதுமில்லை.

இருக்கும் போது:
வருத்தம்,சொல்லி அழ
ஒரு மனிதன் இல்லை.

சந்தோஷம் சொல்லி
கொண்டாட ஒரு மனசு இல்லை.
உயிர் நீ! என்று சொன்ன
உயிர் பிரிந்த சோகம்!



உதிரத்தோடு பிறந்தவர்
ஒவ்வொருவராக மரித்த துயர்!
உதிரத்தில் பிறந்தவர்
உதிர்ந்த வருத்தம்!

ஆபத்தில் கை கொடுத்த நண்பர்கள்
பறந்து பட்ட பரிதாபம்!
இத்தனையும் சுமந்தவர் செவியில்
ஒரு வார்த்தை; விழுந்ததே!
"வயதே ஒரு சுமையில்லையா?’

அக்கணம்
கூடுவிட்டு இங்கு ஆவி போயிற்று!
ஊர் விட்டு உயிர் போன பின்னே,
சுற்றி உட்கார்ந்து,
சொல்லி அழ,

ஒரு சென்மம் இல்லாத
துக்கத்துடன்.

**கவிஞர் சசிகலா விஸ்வநாதன்**

பசிக்காத கற்சிலைக்கு
நூறு ரூபாய் காணிக்கையும்

பசித்த மனிதனுக்கு
ஒரு ரூபாய் பிச்சையும்
போடும் முட்டாள்கள் வாழும்
சமூகம் தான் இது
சிந்தனை செய் மனமே
கற்பனைகள் இன்றி



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, வளையமாதேவி (சிதம்பரம்)


# கடந்து போகிறது

நகராத சுவரெங்கும்
நாளையே நகரக்கூடும்
நம்பிக்கையின்மைக்குள்
வருக வருக அழைப்பிதழ்கள்
காட்டி நிற்கின்றன
பளபளப்பின் ஆடம்பரங்கள்.
நகரும் வாகனங்களுக்கு
ஊர்ந்துவரும் கலை பயில கையுயர்த்தி
கம்பீர நடை பயின்றபடி
மாலை தாங்க முடியாத
கழுத்திலும் தங்கம் நிறைத்து
சாலைகளின் ஓரங்களில்
வானுயரப் பதாகைகள்.
சிறுபரப்பு கிடைப்பினும்
அழகுக்கு இலக்கணம் எழுதி
ஆண்மை பெருக்கும்
அலைபேசி எண்களை விசிறியபடி
அச்சிட்ட விளம்பரங்கள்.
நாய்களும் குழிகளும்
ஓய்வெடுக்கும் நெகிழிகளின் வலைப்பின்னலில்
வீசும் காற்றும் வெக்கையாகி
சாலைகளை சூறாவளியாக்கி
காணுமிடமெங்கும் வாகன நெரிசல்கள்.
நகரத் தூய்மைக்கென
நாளும் அயராதுழைத்திடும்
திட்டங்களின் பட்டியலோடு
கடந்து போகிறது
ஒலிப்பெருக்கி அறிவிப்புகள்.




கவிஞர் இளையவன் சிவா

போதனை வழி செல்
போதை வழி செல்லாதே.
போதனை உனக்கு வழி தரும்,
போதை உனக்கு வலி தரும்.
போதனை உயிர் வாழச் செய்யும்,
போதை உயிர் வாடச் செய்யும்.
போதனை வழிச்சென்று
போதையை அழி,
விழித்து எழு இளைய சமூகமே.



கவிஞர் பெ. சுரேகா, திண்டுக்கல்

# சிந்தனை செய் மனமே!



திட்டமிட்ட அலுவலிலே தொய்வு வராது ;
செப்பனிட்ட சிந்தையிலே தோல்வி இல்லை !
கொட்டிட்ட சொல்லெல்லாம் ஊறு செய்யும் ;
குன்றேறி நின்றிட்டால் அடக்கம் வேண்டும் !

பட்டறிவு துணையோடு திட்டம் செய்யின்
பாழ்பட்டுப் போகாது ; வானம் எட்டும் !
தொட்டிட்ட பணியெல்லாம் திருத்தம் கொள்ளின்
துலங்கிடுமே ; தடையெல்லாம் கடக்கும் வெல்லும் !

சட்டென்றே நல்திருத்தம் யாரும் சொல்லின்
தவறாமல் ஏற்றிட்டால் பகையும் உண்டோ !
சுட்டிடும்சொல் பழகிட்டால் துன்பம் சேரும் ;
தூயநெஞ்சின் வருத்தங்கள் உன்னை அழிக்கும் !

நுட்பறிவு பழகிட்டால் யாரும் அணைப்பார் ;
நூலறிவின் துணைகொண்டால் ஐயம் தெளியும் !
கட்டுப்பா டொழுக்கம் சேர்ந்திட்டால் உன்னைக்
காவலனாய் காத்திட்டே வாகை சூடடும் !

கவிஞர் ஆ ச கந்தன், திருவொற்றியூர் (சென்னை)


# நினைவு திரும்புமா?



காற்றலையில் மௌனக்குரல் பேசியவள்,
என் இதயத்தின் உயிர்நாடியைப்
புரட்டிப் போட்டவள்.
காதலெனும் வாழ்வு தந்து,
நினைவெனும் பரிசு தந்து,
தொலைதூரம் சென்றவள்.
அவள் மீண்டும் வருவாளா?
என் நினைவுகள் திரும்புமா?
மாலைக்கதிர் மறையும் நேரம்
மனக்கதிர் ஏன் மறையவில்லை?
பிரிவு நடந்தாலும்
பிராணன் ஏன் ஒப்புக்கொள்ளவில்லை?
அவள் பெயரைச் சொல்லும் காற்றும்
என் கண்ணீரைத் துடைக்கவில்லை?
அவள் சிரிப்பு ஒலித்த தெருக்கள்
இன்னும் எனக்காக காத்திருக்கின்றன.
நினைவுகள் மட்டும் நிழலாய் நின்று
நெஞ்சுக்குள் நெருப்பாய் எரிகின்றன.
தொலைவில் சென்ற காலடிச் சத்தம்
தொட்டுத் திரும்பும் நாளுண்டோ?
ஒருநாள் அவள் திரும்பினாலும்
நான் அதே மனிதனா இருப்பேனா?
அல்லது
நினைவுகள் மட்டும் உயிரோடு இருந்து
நான் மௌனமாகிவிடுவேனா?
நினைவு திரும்புமா?
அல்லது
நினைவோடு நான் வாழ கற்றுக்கொள்வேனா?

கவிஞர் இ. கேவர்மன், முல்லைத்தீவு

ஓய்வு என்பது தொடக்கம்
முடக்கம் அல்ல.
ஓய்வு முதுமைக்குள்
முடங்குவது அல்ல.
பலவீனங்களுக்கும்
அடங்குவதும் அல்ல.
அடுத்த தொடக்கத்தின்
ஆச்சர்யக்குறி.
கேலி செய்பவர்களுக்கு
கேள்விக்குறி அல்ல.



ஓய்வு என்பது
சாய்வு நாற்காலியில் சாய்ந்த படி
நாளிதழ்களைப் படித்து - அதை
அருகாமையில் உள்ளவரிடம்
வாந்தி எடுத்து; வயதை தள்ளி
வாழ்க்கையை ஓட்டுவது அல்ல.
அறுபதை தாண்டிய பின்னும்
இருபதைப் போல ; கலப்பையை
கம்பீரமாக தோளில் சுமந்து
வயலில் இறங்கி வியர்வை சிந்தி
உழைப்பவனை பார்த்தால் புரியும்
உழைப்பிற்கு ஏது மூப்பு என்று.
ஓடி முடித்த குதிரை ஓடிக் கொண்டிருக்கும்
குதிரைக்கு சொல்லும் அனுபவமே சிறந்த பாடம்.
வருகின்ற தலைமுறைக்கு பயணம் செய்ய
முதுமை உருவாக்கி தரும் நம்பிக்கை ஓடம்.
ஓய்வு பெற்றவர் அலைபேசியில் அழைத்தால்
அவர்கள் எண்ணைத் துண்டித்து
உங்கள் மேல் அவர்கள் வைத்த மரியாதையை
துண்டித்து விடாதீர்கள்.
அவர்கள் அழைப்பிற்கு பின்னால்
உங்கள் மேல் கொண்ட அக்கறை
ஒளிந்திருக்கும்.
அதை ஒழித்து விடாதீர்கள்.

ஓடும் நதிக்கு ஓய்வில்லை.
பாடும் குயிலுக்கு ஓய்வில்லை.
பேசுகின்ற மொழிக்கு ஓய்வில்லை.
வீசுகின்ற காற்றுக்கு ஓய்வில்லை.

உழைக்கும் மானிடர்க்கு ஏது ஓய்வு?

கவிஞர் முனைவர். அ.ச.மு.முனியாண்டி

# அன்பு கொண்ட உள்ளமாய்

வாழ்வு என்றும் வசந்தமாய்
வளமை கொண்டு விளங்கிடவே
அன்பு கொண்ட உள்ளமாய்
அமைந்திடல் வேண்டுமே.

அன்பு நட்பு பாசமென
உறவு போற்றி வாழ்வதே
இனிமை நிறைந்த வாழ்வென
தலைமுறை தாண்டியும்
சிறப்பு வந்து சேருமே.

உயிர் தொழில் உழவும்
மனிதநேய மாண்பும்.
இயற்கையை தெய்வமாய்
போற்றி வணங்கும் பண்பும்.
வாழும் காலம் யாவுமே
வளமை வந்து சேருமே.

தீதும் நன்றும் நம் செயலால்
விளைகின்ற செயல்தானே.
இன்பம் பயக்கும் சொல்லாலே
இனிமை வந்து சேருமே.

வாடிய பயிரைக் கண்டு வாடிய
"வள்ளலாரின் பூமியில்"
கோடைகால மழை ஊற்றாய்
நன்மை பயக்கும் செயலாலே
இல்லாமை விரட்டுவோம்
இனிய வாழ்வு படைத்திடுவோம்.



கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

பளபளவென்று நகாசு
வேலையில் மின்னும்!
கண்ணைக் கவர்ந்து
கருத்தை மயக்கும்!
புன்னகை அணிந்து
பொய்யாய் மின்னும்!
ரகசியமாய் செய்ததை
அம்பலத்தில் அறிவிக்கும்!
நல்லவை எது?
அல்லவை எதுவென்று
பிரித்தறிய முடியாமல்
புத்தியைப் பேதலிக்கச்
செய்யும்!
பாதுகாப்பில்லா இணையம்
கழுத்தை இறுக்கும்!
விட்டில்பூச்சியாய்
நெருப்பில் விழாமல்
மெய் அறிவின் ஒளியில்
சிந்தித்து நடப்போம்!
புத்திசாலித்தனத்துடன்
இணையத்தைக் கையாள்வோம்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

## சொல்வதை கேட்காமல்



பணி முடித்து உறக்கத்தின் முன்
சிறிய இடைவெளியில்
தனித்திருக்கையில்

'புத்தியை'
நடந்தவை பற்றியும்
இன்றையவை பற்றியும்
நாளையவை பற்றியும்

இதுபோதாது என்று
அறையின் அஃறிணைகளோடு
உன்னை சுத்தம்செய்ய நினத்தேனே
உன்னை வெளியேற்ற
நினத்தேனே
உன்னை இடமாற்றம்
செய்ய நினைத்தேனே என்று
மானசிகமாய் உரையாட வைத்து

கொஞ்ச நேரம் சிந்தனைகளற்று
என்னையே உற்றுபார்க்கிறனே என்ற
கோரிக்கையையும் மறுத்து

புத்திசொல்வதை
எதையும் கேட்காமால்
அடம்பிடிக்கும் 'மனது'

*******

## அதுவரை

நீண்ட நேரம் பேசிவிட்டு
ஒரு விஷயம் சொல்லணும்
அவசர பணியாய் செல்லுகிறேன்
பிறகு பேசலாம் என்றால்

கேட்பவருக்கு

அது பிறரைப் பற்றியதா?
நம்மைப் பற்றியதா?
அது நமக்கானது எனில்
நல்லதா ? கெட்டதா?
பயம் கொடுப்பதா?
நம்பிக்கை அளிப்பதா?
எதிர்பார்த்தா?
முற்றிலும் மாறானாதா
நடந்ததா? நடக்கப்போவதா
இப்படி
பல கேள்விகள்

சொன்னவர்
வாய் திறக்கும் வரை.

# நோய்

மனித பிறவியில் நோயின்றி வாழ்தல்
புனிதமாக கருதும் புகழை கொண்டதே
திடமாய் வாழவே திரண்ட குணமாய்
இடமாய் மலரும் இனிமை வளமே

வந்ததே நினைத்து வருந்தாத குணமாய்
எந்நாளும் மருந்தினை எப்போதுமே விலக்காது
தப்பாமல் உண்டு தரணியில் நிலைப்போமே
காலத்தின் கோலமாய் காரணியாய் நிலைக்குதே



சிறியவர் முதலாய் சிறப்பான பெரியோர்வரை
வறியோர் தொடங்கி வசதி படைத்தோரையும்
வாட்டும் வியாதியாய் வாசலில் நிற்குதே
தேற்றியே மனதை தேகத்தில் உயர்வோமே

பாசத்தின் கருணையில் பாலமாய் பணிந்து
நேசமாய் வாழ்ந்து நேர்மையில் உயர்வோமே
எதிர்காலம் நம்மை என்றுமே வாழ்த்தி
பாசத்தின் பண்பில் பாரம்குறைத்து வாழ்வோமே

மருந்தை விருந்தாய் மணித்துளியாய் எடுத்து
விரும்பும் போதெல்லாம் விருப்பமாய் தந்திடுமே
சோகமும் களைந்து சுற்றமும் மறந்து
தாகமாய் கனியும் கண்ணிய வாழ்வே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# உலகம் வலிகளை தரக்கூடும்

உலகம் வலிகளை தரக்கூடும்
உனக்கு நீயே மருந்தாகு

கவலைகளை நீயும் கருதாமல்
விதியின் வழியில் விளையாடு

நாளை என்பது வாழ்வில்லை
இன்று என்பதே நிஜமாகும்

வென்று காட்டிட போராடு
வெற்றி வந்திடும் உன்னோடு

நெஞ்சினில் ஆசை நிறைவு செய்
நித்தமும் அதற்கு எடை போடு



கனவு என்பது மெய்யாகும்
காலம் என்பதே கை கூடும்

காதல் என்பது தள்ளாட்டம்
அதை கடந்த பின்பே தேரோட்டம்

வாழ்க்கை என்பது போராட்டம்
அது வந்த பின்பே தடுமாற்றம்

இறுதிவரை நீ போராடு
வெற்றி வந்திடும் உன்னோடு.

கவிஞர் செ. வசந்தகுமார், சேலம்

ஒவ்வொரு நாளும் போராட்டம்.
போராட்டம் எதிர்கொண்டே பயணிப்போம்.
ஏற்றத்தாழ்வுகளை எதிர் கொள்ள
மனப்பக்குவம் வரவில்லை!
ஓ மனிதா!
நீ நன்னெறியோடு நடை போடுகிறாயா?



"சொற்கள் இரண்டாம் பட்சம்
அமைதியே முதன்மையின் உச்சம்"
இது ஓஷோ அவர்கள் சொன்னது.
மனதை ஒருமைப்படுத்தி
மூச்சை கவனித்து செல்.

உனக்குள் ஒரு தேடலும் தோன்றிடுமே!
நினைவுகள் நீர் குமிழ்களாய் வந்து செல்லுமே!
பாரதி சொன்ன வாக்கியமே
" இன்று புதியதாய் பிறந்தேன்"
இரவில் படுத்து கண் விழித்து
நாளும் சொல்ல புது மனிதன் தானே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

உதிர்ந்த
இலைகளின்
இடங்களை
மாற்றமில்லாமல்
நிரப்பிக் கொண்டிருக்கும்
துளிர்விடும்
பச்சை இலைகள்
சுழற்சி
எங்கும் எதிலும்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்



உங்களை
உந்துவதற்கு தேவை
தன்னம்பிக்கை.

மற்றவர்களை
உந்துவதற்கு தேவை
அன்பு

அன்பை எப்போதும்
அளந்து பார்க்காதே,
அன்பை எப்போதும்
உணர்ந்து பார்

அழிந்து போகும்
அழகு தேவை இல்லை எனக்கு,
என்னை, அரவணைக்கும்
அன்பு மட்டும் போதும்

எங்கே அன்பு
இருக்கிறதோ,
அங்கே அமைதியும்
அடக்கமும் நிறைந்திருக்கும்

அன்பால்
ஏமாந்தவர்கள், ஒருபோதும்
அழிந்ததும் இல்லை

அன்பை வைத்து
ஏமாற்றியவர்கள்
இறுதி வரை நன்றாக
வாழ்ந்ததும் இல்லை

கவிஞர் க. சௌமியா, கடம்பூர் (சேலம் மாவட்டம்)

# பனித்துளியான வாழ்வு

இறகின் மென்மையாய் பனித்துளிகள்
கல்லின் உறுதியாய் உறையும்!
காற்றாய் பயணிக்கும் மேகங்கள்
கல்மழை பொழிய பூமியதிரும்!

கால தாமதங்கள்
பொய்யாக்கும் உண்மைகளை உலகில்!
கதைக்காத நாட்களில்
முப்பொழுதும் நினைவுகளில் காயங்கள்!

மனம் வருடும் தென்றல்
சூறாவளியாயின் உயிர் உடைத்தெறியும்!
இலகுவாய் வாழ்வின் பயணம்
உணர்ந்தால் முற்களின் காயங்கள்!

மனதில் இசைந்திருந்தால்
மௌனமும் புரிந்திடும்!
மனதும் இலேசாகும்
நித்திரையும் இதமாகும்!

சொற்களின் முற்கள்
விரியனிலும் நஞ்சுகள்
பாதையின் தடுமாற்றங்கள்
பயணிப்பதில் தாமதங்கள்

எளிது வழித்தடத்தில் நடைபோடல்
அரிது வழியமைப்பது கானகத்தில்!
இறைவன் இல்லா வாழ்வியல்
இருந்தும் இல்லா மாயையே!



வாழ்க்கையெனும் பாதை
வகுத்துவிட்ட வாழ்வு
வாழ்ந்திடவும்
வளர்ந்திடவும்

வாடாது பயணிக்குதே
வரும்பாதை அறியாமலே!

கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

கடகடவென சத்தமின்றி
ஊர்ந்து செல்கின்றது
காத்தாடியை போல மனமும்

அந்த இதழோரம் தோன்றும்
குறுநகை சற்றே பின்னோக்கிய
பொழுதினிலே

சற்றே வெட்கமும் சிறுமயக்கமும்
உன் ஒற்றை பார்வைக்குள்
ஒளிந்த நொடிகளும் நாட்களும்
அள்ளித் தெளித்த ஞாபகத்தை
என்னவென்பேன்

பரிமாற்றத்தில் இடர்பெயர்ந்த
மனங்களை பிரித்தெடுக்க
யாருக்கு உரிமையிங்கு

காதல் என்பது இணைவதில்
மட்டுமா என்ன
எங்கோ நீயும் சுகமாய்
இங்கே நானும் சுகமே

இதோ என்னவரின் அழைப்பில்
என் மனம் சிலிர்த்துப் போகுது
தெளிந்தபின் சீரான ஒடை
நீரின் மெல்லிசை போல்
உள்ளம் உணர்ந்த நொடிகளில்
எதார்த்தம் பழகுகிறது

காதல் என்பது கடந்து போவது அல்லவே
முதல் காதலின் நினைவுகள்
மறையாத மறைவினிலே



வயதின் தாக்கமோ என
சற்றே யோசித்த நாட்கள்
ஏன் பிரிந்தோம் என
இதுவரை அறியவுமில்லை

காதலுக்கு முகவரி தந்த கனவுகள்
இதோ நட்புக்குள் நனைந்து கொண்டே
வலியொன்றும் இல்லை
வாழ்க்கையின் ஓட்டமும்
நதிக்கரையின் போலவே

நிற்காத நாட்கள் ஞாபகத்தின்
சுவடுகளை சுமந்து/
மனமெனும் வண்டியின் ஒய்யார கூவல்
ஞாபகவண்டியின் ஓட்டம்
தடம் புரளாத வரை அழகியலே

கவிஞர் சுந்தரிபாஸ்கரன்

இதயம் இரண்டு
இதழ்கள் இரண்டு
இணைந்தோம் ஒன்றாய
இனிமேல் நமக்கு
இன்பம் என்றும்
கவினும் வேண்டாம்
பணமும் வேண்டாம்
காதலில் கரைந்தோம்
உணர்வில் கலந்தோம்
ஒன்றுக்குள் ஒன்றாய்
எண்ணங்கள் வளர்த்தோம்
இருட்டாய் இருந்தேன்
வெளிச்சம் கொணர்ந்தாய்
இரையைப் போக்கும்
உணவாய் வந்தாய்
இன்னல் தீர்க்கும்
இனபம்கண்டேன்
வலிமிகும் பாதையில்
வழித்துணை நீதான்
வாழ்வைச் செதுக்கிய
வலுஉளி நீதான்
என் தவற்றை நீக்கும்
ஆசான் நீயே
என் தவத்தில் கிடைத்த
தங்கமும் நீதான்
இடற்பாட்டில் இன்னிசை
பறவை நீ
இதயம் கவர்ந்த என்னுயிர்
பாவையும் நீ



கவிஞர் ரெஜினாபானு, பரமக்குடி



சிறிய முள்ளும் பெரிய முள்ளையும்
ஓட வைத்திடும் நொடி முள்ளின்
செயலும் புனிதமன்றோ?

ஓய்வெடுக்கா உழைப்பாளியே
நின் சீரான சுறுசுறுப்பும்
வியப்பைத் தந்திடுதே!

நேரம் தவறாமை என்ற
நல்லொழுக்கத்தைக்
கற்றுக் கொடுத்த ஆசானே!

எண்ணிலடங்கா செயல்களுக்கும்
உனை வைத்தே நேரம்
கணக்கிடப் படுகிறதே!

நல்ல நேரம் பார்த்து காரியம் செய்திடும்
சிந்தையைக் கொடுத்த
நன்னடத்தையே!

பொன் போன்ற காலத்தையும்
போராடி சேமிப்பதில்
முதன்மையும் நீயே!

கடமையை மறந்து காலந்தனை
வீணடிக்காது கடிகாரம் போல
கருத்துடனே வாழ்ந்திடுவோம்!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# சந்திப்பின் சிறகுகள்

காதலிப்போர் சந்தித்தால் களிப்பு மிகுந்திடுமே!
இதயத்தின் கதவுகள் திறந்திடும்! சந்திப்பில்
விழிகளின் மொழிகள் பற்பல கவிபேசும்!
எழுந்திடும் மகிழ்வலைகள்! பிரிகையில் ஏங்கும்
அடுத்த சந்திப்பு எப்போது நிகழுமென்று!
ஆயிரம் முறை யோசித்த உரையாடல்கள்
பயனின்றி மௌனத்தில் கரைந்திடும் வார்த்தையின்றி!
ஆயிரமாயிரம் கவலைகளைக் கரைத்துவிடும் புன்னகை!
விரிந்த சிறகுகள் உதிர்வதாய் உணர்வது பிரிகையில்!
உதிர்ந்த சிறகுகள் அடுத்த சந்திப்பின் எதிர்பார்ப்பில்
மீண்டும் முளைத்தெழும்! வாழ்வியல் மாற்றத்தை
உண்டாக்கும் சந்திப்பு! உணர்ச்சிகளின் சங்கமத்தால்!
அன்புடை நெஞ்சங்கள் கலந்திடும் செம்புலப் பெயல்
நீர்போல்! நீண்டபிரிவின் பின்னர் சந்தித்தால்
நீர்பெருகும் கண்களில்! பிரிவுத் துயர்தீரும்!
ராமன் சீதை சந்திப்பில் "அண்ணலும் நோக்கினான்;
அவளும் நோக்கினாள்!" இதயங்கள் இரண்டும்
எய்தி ஒன்றிய செய்தியுண்டு கம்பராமாயணத்தில்!
குறிப்பறிதல் என்றொரு அதிகாரம் வள்ளுவத்தில்
சாற்றிடுவார் சந்திப்பில் நிகழும் நிகழ்வுகளை!
இறைச் சந்திப்பில் ஏற்படும் பேரின்பம்
திருவாசகம், தேவாரம், பிரபந்தங்கள் உணர்த்திடுமே!
பருவங்கள் பலகடந்தும் சந்திப்பின் நினைவலைகள்
நிறைந்திருக்கும் நினைவுகளில் எல்லோர் வாழ்வினிலும்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

### எறும்பு

பலமுறை தோற்றும்
முயற்சியை
கைவிடாமல் தன் உணவை
சேகரித்து செல்கிறது.

### பிரசவம்

இது மறுப்பிறப்புதான்
என்பதை
நன்றாகவே புரிந்துகொண்டும்
லேபர்வார்டுக்கு செல்கிறாள்.

### விதவை பெண்

பூவைப்பது
என் உரிமை
என்று தெரிந்தும்
தொடகூட முடியாமல் நிற்கிறேன்.

### மழைத்துளி

கண்களில் வழியும்
கண்ணீரை
மறைக்கும் ஒருவழி.



### கல்யாண பெண்

பலகனவுகள் இருந்தும்
அதை மறைத்து
திருமதி என்ற
பதவியை ஏற்கிறாள்.

### பட்டதாரி

அடுத்த என்ன என்று
அறியாது தொடங்கிறது
ஒரு பட்டதாரியின் பயணம்.

### வாழ்க்கை

புகழ்ச்சிக்கு மயங்காமல்
இகழ்ச்சிக்கு தலைகுனியாமல்
இருந்தால்
அனைத்தும் நம் வசமே.

கவிஞர் கி. கரோ

## நூல் அனுபவம்

கவிதைத் தொகுப்பு - நீரா ; நீ . இராதாகிருஷ்ணன் (தோழர் துங்கன்)
நீலக்கோவை பதிப்பகம், வேப்பூர் கடலூர்
பக்கம் 36. - விலை 40. - தொடர்புக்கு 9344640893.

மனவயலில் எண்ண விதைகளின் நடவு கடுகின் உருவமா குணத்தைக் தீர்மானிக்கிறது? யானைக்கும் எறும்பின் வருகை அச்சத்தை ஏற்படுத்துகையில் பக்கங்களா சிந்தனைகளின் ஓட்டத்தை முடிவுசெய்துவிடப்போகின்றன? நோபல் பரிசாக பெற்ற கிழவனும் கடலும் நாவலின் பக்கங்கள் நூறுக்கும் குறைவு என்பதை கவனம் கொள்வோமே. முப்பத்துஆறு பக்கத்தில் கவிதைகளின் வழியே களம் கண்டிருக்கும் தொகுப்பு முதல் தொகுப்பு கன்னி முயற்சி, அதில் தனது சிந்தனை ஏவுகணைகளை நம் மனப்பரப்பில் எட்டிய தூரம் வரை எரிந்திருக்கிறார் கவிஞர்.




*காட்டில் மிருகம் தானே

"நீ மனுஷன் இல்ல மிருகம்
நான் மிருகமானேன்
மிருகமாக்கிக் கொண்டேன்
இந்தக் காட்டில்
மிருகங்கள்தான் வாழ வேண்டும்
மனிதர்களுக்கு என்ன வேலை...?"

இயற்கையின் அளப்பரிய கொடையாளி காடு. காடுகளை அழித்து பணம் எண்ணுகிற நாட்டிற்குள் வாழும் விஷக்கிருமிகளைப் பற்றிய கேள்விதான் இந்த கவிதை. வனத்தை காவு கொடுத்துவிட்டு கார்டன்களைப் பெருக்கும் மனிதனுக்கு கடைசியில் சுவாசிக்கவும் காற்றில்லாது மடியப்போகிறான் மனிதன் மட்டுமே.

**கவிஞர் இளையவன் சிவா**

## நூல் அனுபவம்

"புத்தி "கெட்டவன் "

கெட்டதினால் சில
வார்த்தைகளை விட்டவன்
விட்ட வார்த்தை எல்லாம்
எப்படியோ
க "விதை " யாகி போனது.

கவிஞர் எண்ணத்தால் கெடவில்லை. தன்னை மேலும் மேலும் மெருகேற்றிக் கொள்கிறார். கெட்டதால் நல்ல பழக்கங்களை ஏற்றுக் கொள்ள முடிந்த அவருக்குள் எழுதும் வரிகள் எல்லாம் கவிதைகளைத் தாண்டி வாசிக்கும் மனதில் விதைகளாகவே தூவத் தோன்றுகின்றன

**உடையாமல் இரு

"தடையாய் வரும்
தடையை தடையென
பாராமல் உடை,
உடைந்து விடாமல்."

இங்கே 'உடைந்து விடாமல்' என்ற சொல்லே கவிதையின் மொத்த அழகையும் ஆழத்தையும் நமக்குள் புகுத்தி விடுகிறது. கப்பல் புதிதாக இருப்பதற்கு வண்ணங்கள் அடித்து அழகாக இருந்தாலும் கடலில் சென்றால் தான் அதற்கு மதிப்பு. அதேபோல் உலகில் விலைமதிப்பற்ற பிறப்பான மனிதப் பிறப்புதான் சந்திக்கும் அத்தனை சோதனைகளில் இருந்தும் மீண்டெழுந்து புதிய புதிய பாதைகளை உருவாக்குவதன் அவசியத்தை உணர்த்துவதே. அதையே இந்த கவிதையும் செய்து காண்பித்திருக்கிறது.

கவிஞர் இளையவன் சிவா

வி. கனகசபை (வி. கனகசபைப் பிள்ளை, மே 25, 1855 - பிப்ரவரி 21, 1906) ஒரு தமிழறிஞர். ஆங்கில மொழியிலும் சிறப்பான அறிவு பெற்றிருந்த அவர் தமிழ், தமிழ் இலக்கியம், தமிழர் வரலாறு ஆகியவற்றை ஆராய்ந்து அவை தொடர்பில் ஆங்கிலத்தில் பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார். கனகசபைப் பிள்ளை அறிமுகப்படுத்திய கஜபாகு காலம்காட்டி முறைமை வரலாற்றாய்வாளரால் சங்ககால தமிழக வேந்தர்களின் ஆட்சி ஆண்டுகளை வரிசைப்படுத்த பரிந்துரைக்கப்பட்ட ஆய்வுமுறை ஆகும். இவர் ஆங்கிலத்தில் எழுதிய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் (The Tamils 1800 Years Ago) என்னும் நூல் புகழ் பெற்றது.

## இளமைக்காலம்

கனகசபை கோமளேசுவரன்பேட்டையில் பிறந்து வளர்ந்தார். மிகவும் இளம் வயதிலேயே சென்னைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றார். இதனால் இவர் boy graduate என செல்லமாக அழைக்கப்பட்டார். அப்பல்கலைக் கழகத்திலேயே, சிறிது காலம் தமிழ் மொழிபெயர்ப்பாளராக பணிபுரிந்தார். பிறகு, அஞ்சல்துறையில் கண்காணிப்பாளராக சேர்ந்து பணிபுரிந்து, உயர் அதிகாரி ஆனார். சட்டப் படிப்பும் முடித்து மதுரையில் வழக்கறிஞராகத் தொழில் பார்த்தார்.



**தமிழாராய்ச்சி**

அஞ்சலகத் துறையில் பணியாற்றிய போது, பல்வேறு ஊர்களுக்கு மாற்றல் பெற்றார். எந்த ஊருக்குச் சென்றாலும், அப்பகுதிகளில் காணப்படும், பழந்தமிழ் ஓலைச் சுவடிகளைச் சேகரித்து வைத்திருந்ததுடன், அவற்றைப் படித்து ஆய்வுகளும் செய்து வந்தார். தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை கொண்ட கனகசபைப் பிள்ளை முதலில் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றை காப்பியங்களை ஆராயந்தார். அவ்வாய்வுகளைக் கட்டுரைகளாக 1895 முதல் 1901 வரைஆங்கில, தமிழ்ப் பத்திரிக்கைகளில் தொடர்ந்து எழுதினார். இதனால் தமிழர் வரலாறு, தமிழ் இலக்கியம் போன்ற துறைகளில், அவருக்கு ஆழ்ந்த அறிவு மேலோங்கி இருந்தது. ஓலைச்சுவடிகளைத் தொகுக்கவும், ஏட்டுச்சுவடியைத் தாளில் எடுத்தெழுதவும், தன்னுடன் உதவியாளர் ஒருவரை வைத்துக் கொண்டார். ஆனால், அவர் எழுதிய நூல்கள் எதையும் பதிப்பிக்க விரும்பவில்லை. அவர் 20 ஆண்டுகள் தொகுத்து வைத்திருந்த பத்துப்பாட்டு, புறநானூறு, இன்னும் பிற ஏராளமான தமிழ் நூல்கள் அனைத்தையும், தமிழ்தாத்தா உ. வே. சாமிநாத அய்யருக்கு, அவ்வப்போது வழங்கினார்.

தமிழின் பெருமையைப் பிற மொழியினரும் அறிந்து கொள்ளும்படி தனது ஆய்வுகளைக் கட்டுரைகளாகவும் நூல்களாகவும் ஆங்கிலத்தில் எழுதினார். அவ்வாறு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நூல்களில் களவழி நாற்பது, கலிங்கத்துப் பரணி, விக்கிரம சோழன் உலா குறிப்பிடதக்கனவாகும். சென்னையில் இருந்து வெளிவந்த "மதராஸ் ரிவியூ" என்னும் ஆங்கில இதழொன்றில் தமிழர் வரலாறு பற்றி தொடர்ச்சியாக இவர் எழுதிய கட்டுரைகள் பின்னர் தொகுக்கப்பட்டு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் (The Tamils 1800 Years Ago) என்னும் தலைப்பில் ஆங்கில நூலாக வெளிவந்தது.

இதன் மூலம், தமிழ் வரலாறு குறித்து, முதன் முதலில் முறையான காலவரலாற்று ஆய்வை நிகழ்த்தியவர் என்ற பெருமையைக் கனகசபைப்பிள்ளை பெறுகிறார். கா. அப்பாத்துரையார் இந்நூலை ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் என்னும் பெயரில் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தார். பிற்காலத்தில், உ. வே. சாமிநாதையரின் பதிப்பு முயற்சிகளுக்கு உதவுவதற்காகத் தன்னிடம் இருந்த பழம் தமிழ் நூல் ஏடுகளைச் சாமிநாதையருக்குக் கொடுத்து உதவினார்.

## மறைவு

கனகசபைப் பிள்ளை 1906 சிவராத்திரி நாளில் தனது 50வது அகவையில் காஞ்சிபுரத்தில் காலமானார்.

நன்றி
https://ta.wikipedia.org




அகர முதல இலக்கியப் பேரவை
நாளை
நமதே
பயத்தையும், தயக்கத்தையும்,
தூக்கிப்போடுங்கள்;
வெற்றி உங்கள் காலடியில்.
அகர முதல இலக்கிய பேரவை
Aagaramuthalaa
www.aagaramuthala.com
aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :

9597887847
8870884969




## அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com